Q.C. 113

## DEPARTMENTAL EXAMINATIONS (COMPUTER BASED TEST)

| Name of the Test: | Departmental Test for Audit Assistants of Highways Department - First Paper (Theoretical & Practical) (Without Books) | 125 |
|---|---|---|

Maximum Time: 2.30 Hour Maximum Marks: 100

## ***IMPORTANT INSTRUCTIONS***

## OBJECTIVE TYPE

கொள்குறி வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**

வினாக்களுக்கு விடையளிக்கத் தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளைக் கவனமாகப் படிக்கவும்.

1. This computer based Test contains 100 number of questions in objective Type.
இந்தக் கணினி வழித் தேர்வானது, 100 கொள்குறி வகையிலான வினாக்களைக் கொண்டது.

2. Answer all questions. Each question carries one mark
அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் ஒவ்வொரு வினாவும் ஒரு மதிப்பெண் உடையது.

3 In case of doubt, English version is the Final.
வினாக்களில் சந்தேகம் இருப்பின் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

4. Words of masculine gender in these questions shall, where the context so require, be taken to include feminine gender.
இந்த வினாக்களில் இடம் பெற்றுள்ள ஆண் பாலினத்தவரின் வார்த்தைகளில் தேவைப்படின், சூழலுக்கேற்ப பெண் பாலினத்தவரின் வார்த்தைகளும் அடங்கும்.

5. Before answering the questions in CBT, candidates should read the following instructions displayed in the monitor:
விண்ணப்பதாரர்கள் கணினி வழித் தேர்விற்கு விடையளிக்கத் தொடங்கும் முன் கணினியின் திரையில் தோன்றும் அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்.

**a)** One question will be displayed on the screen at a time.
ஒரே நேரத்தில் ஒரு வினா மட்டுமே கணினித் திரையில் தோன்றும்.

1. Who is competent to order the destruction of records not included in appendix – 9?
நெடுஞ்சாலைத்துறை கட்டளை கொத்து இணைப்பு 9ல் குறிப்பிட்டுள்ள அட்டவணையின் படி, அழிக்க வேண்டிய ஆவணங்கள் மீது உத்தரவு வழங்க எந்த அலுவலர் பெயர் இடம் பெறவில்லை?

(A) Divisional Engineer
கோட்டப் பொறியாளர்

(B) District Collector
மாவட்ட ஆட்சியர்

(C) Assistant Divisional Engineer
உதவிப் பொறியாளர்

(D) Chief Engineer
தலைமைப் பொறியாளர்

2. Who is to approve the contract documents of Special nature and for those exceeding Power of acceptance by Superintending Engineer?
கண்காணிப்பு பொறியாளருக்குரிய அதிகார வரம்பிற்கு மீறிய சிறப்பு இனங்களை ஒப்பந்த ஆவணங்களின் மீது யார் ஒப்புதல் அளிப்பார்

(A) District Collector
மாவட்ட ஆட்சியர்

(B) Chief Engineer
தலைமைப் பொறியாளர்

(C) Secretary to Government
அரசு செயலாளர்

(D) None of these
இவை எதுவுமில்லை

3. The Chief Engineer will distribute the amounts allotted to him among the Superintending Engineers and other Officers under his direct control ________ is permitted to retain a portion as a reserve.
தலைமைப் பொறியாளர், தனது கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து கண்காணிப்பு பொறியாளர்களுக்கும் மற்றும் நேரடி கட்டுபாட்டில் இயங்கும் அலுவலகத்திற்கு நிதி ஒதுக்கீடு பிரித்தளிப்பார். இந்த நிதி ஒதுக்கீட்டின்படி ஒரு சில பங்குகளை நிறுத்தி வைக்க ________ அதிகாரம் உண்டு.

(A) Superintending Engineer
கண்காணிப்புப் பொறியாளர்

(B) Divisional Engineer
கோட்டப் பொறியாளர்

(C) Chief Engineer
தலைமைப் பொறியாளர்

(D) District Collector
மாவட்ட ஆட்சியர்

4. Who will review the statement of payment and expenditure in form Y send by the Superintending Engineer of each Circle?
ஒவ்வொரு கண்காணிப்புப் பொறியாளர்களால் அனுப்பப்படும் பட்டுவாடா மற்றும் செலவினம் குறித்த Y படிவ விவரங்களை யார் ஆய்வு செய்வார்?

(A) Secretary to Government
அரசு செயலாளர்

(B) District Collector
மாவட்ட ஆட்சியர்

(C) Chief Engineer
தலைமைப் பொறியாளர்

(D) None of these
இவை எதுவுமில்லை

5. The ____________ will check those reports with Audit office and effect the correction and send one copy back to Superintending Engineer for effecting correction in circle records.
தணிக்கை அலுவலரது அறிக்கைகள் தொடர்பான பதிலறிக்கைகள் மீது ____________ ரால் சரிபார்க்கப்பட்டு பதிலறிக்கையில் உள்ள குறைகள், வட்ட அலுவலகத்தில் பராமரிக்கப்படும் ஆவணங்களையும் திருத்தம் செய்ய ஏதுவாக ஒரு நகல் கண்காணிப்புப் பொறியாளருக்கு அனுப்பப்படும்.

(A) Accountant General
மாநில கணக்காயர்

(B) Secretary to Government
அரசு செயலாளர்

(C) District Collector
மாவட்ட ஆட்சியர்

(D) Chief Engineer
தலைமைப் பொறியாளர்

6. Who is responsibility to see that his subordinate do not exceed the distributed money?
சார்நிலை அலுவலர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் கூடுதல் செலவினம் ஏற்படாமல் பார்த்து கொள்ளும் பொறுப்பு யாருக்கு உள்ளது?

(A) District Collector
மாவட்ட ஆட்சியர்

(B) Superintending Engineer
கண்காணிப்புப் பொறியாளர்

(C) Divisional Engineer
கோட்டப் பொறியாளர்

(D) Chief Engineer
தலைமைப் பொறியாளர்

7. The ___________ is to approve the list firms for purchasing leveling Instrument by Divisional Engineer.
நிறுவனங்களிடமிருந்து அளவு எடுக்கும் கருவி கோட்டப்பொறியாளருக்காக கொள்முதல் செய்திட யார் அனுமதிக்க வேண்டும்

(A) District Collector
மாவட்ட ஆட்சியர்

(B) Divisional Engineer
கோட்டப் பொறியாளர்

(C) Chief Engineer
தலைமைப் பொறியாளர்

(D) Superintending Engineer
கண்காணிப்புப் பொறியாளர்

8. The ___________ has full powers to arrange for insurance of goods against damage in transit by rail provided the Special Nature of goods, aginst damage is warrented.
சிறப்பு இன பொருட்கள் கொள்முதல் செய்யும்பொழுது அதில் பயணத்தின் போது அல்லது ரயில் மூலம் கொண்டுவரப்படும் பொருட்களில் பழுதுகள் ஏற்பட்டால் முன்கூட்டியே காப்பீடு தொகை செலுத்தி பொருட்கள் பத்திரமாக கொள்முதல் செய்ய ————க்கு அதிகாரம் உள்ளது.

(A) Superintending Engineer
கண்காணிப்புப் பொறியாளர்

(B) Chief Engineer
தலைமைப் பொறியாளர்

(C) Divisional Engineer
கோட்டப் பொறியாளர்

(D) District Collector
மாவட்ட ஆட்சியர்

9. Who has Powers to decide whether any item of tools plant should be classified as ordinary or special?
கருவி தளவாட இனங்களில் சாதாரண வகை மற்றும் சிறப்பு இனம் என வகைப்படுத்தி தீர்மானிக்கும் அதிகாரம் யாருக்கு இருக்கிறது

(A) Assistant Engineer
உதவிப் பொறியாளர்

(B) Chief Engineer
தலைமைப் பொறியாளர்

(C) Divisional Engineer
கோட்டப் பொறியாளர்

(D) District Collector
மாவட்ட ஆட்சியர்

10. Who is empowered to hire out tools splants for any period in excess of 2 Years?
கருவி தளவாடங்கள் வெளியே வேலைக்கு இரண்டு ஆண்டுகளுக்கு மேல் எவ்வளவு காலமாக இருந்தாலும் வாடகைக்கு விட யாருக்கு அதிகாரம் உள்ளது

(A) District Collector
மாவட்ட ஆட்சியர்

(B) Chief Engineer
தலைமைப் பொறியாளர்

(C) Divisional Engineer
கோட்டப் பொறியாளர்

(D) Superintending Engineer
கண்காணிப்புப் பொறியாளர்

11. Who will inspect the Division office once year and report to the Chief Engineer?
யார் வருடத்திற்கு ஒரு முறை கோட்ட அலுவலகத்தினை ஆய்வு செய்து தலைமைப் பொறியாளர்(நெ) அவர்களுக்கு அறிக்கை அனுப்புவார்?

(A) District Collector
மாவட்ட ஆட்சியர்

(B) Secretary to Government
அரசு செயலாளர்

(C) Superintending Engineer
கண்காணிப்புப் பொறியாளர்

(D) Thasildar
வட்டாட்சியர்

12. Who will report to Chief Engineer whether a revised estimate is necessary or not and whether the work is executed is economical and according to rules
வேலை செயல்படுத்தும் பொழுது சட்டத்திற்குட்படும், சிக்கனமாகவும், மேலும் திருத்திய மதிப்பீடு ஒப்பளிப்பு தேவைப்படுமா என யார் தலைமை பொறியாளருக்கு அறிக்கை அனுப்ப இயலும்?

(A) Superintending Engineer
கண்காணிப்புப் பொறியாளர்

(B) Divisional Engineer
கோட்டப் பொறியாளர்

(C) Assistant Divisional Engineer
உதவிக்கோட்டப் பொறியாளர்

(D) Assistant Engineer
உதவிப் பொறியாளர்

13. Who will inspect the division registers accounts and Measurement books the method of preparing Estimates contractors account the system of plan and papers and office work generally?
கோட்ட அலுவலகத்தில் பராமரிக்கப்படும் பதிவேடுகள், கணக்குகள், அளவுபுத்தகங்கள் மதிப்பீடு தயாரிக்கும் முறை, ஒப்பந்தக்காரரது கணக்குகள், திட்டம் மற்றும் நடைமுறையில் கடித போக்குவரத்து ஆகியவற்றை யார் ஆய்வு செய்வார்?

(A) Chief Engineer
தலைமைப் பொறியாளர்

(B) Superintending Engineer
கண்காணிப்புப் பொறியாளர்

(C) District Collector
மாவட்ட ஆட்சியர்

(D) Thasildar
தாசில்தார்

14. Who can authorize the Divisional Engineer to do Periodical repairs without estimates, in view of committed urgency to be subsequently regularised by the Divisional Engineer?
அவசர காலங்களில், மதிப்பீடு ஒப்பளிப்பு செய்யப்படாமல் தனிச்சீர் பணிகள் செயலாக்கம் செய்ய கோட்டப் பொறியாளருக்கு யாரால் ஒப்பளிப்பு வழங்க முடியும்?

(A) District Collector
மாவட்ட ஆட்சியர்

(B) Chief Engineer
தலைமைப் பொறியாளர்

(C) Superintending Engineer
கண்காணிப்புப் பொறியாளர்

(D) Thasildar
தாசில்தார்

15. Who is competent to levy fine or forfeiture in an agreement as authorized upon him?
ஒப்பந்த உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்ட இனங்கள் பறிமுதல் செய்யவோ அல்லது அபராதம் விதிக்கவோ யார் தகுதியுள்ள அலுவலர்?

(A) Assistant Engineer
உதவிப் பொறியாளர்

(B) Assistant Divisional Engineer
உதவிக்கோட்டப் பொறியாளர்

(C) Divisional Engineer
கோட்டப் பொறியாளர்

(D) District Collector
மாவட்ட ஆட்சியர்

16. Who should send a monthly list of rents due form the officers and send it to the Tresuary Officers and to the head of office where the occupants are employed?
அரசு குடியிருப்பில் உள்ள அரசு அலுவலரிடமிருந்து பிடித்தம் செய்யப்பட்ட வேண்டிய வாடகை விவர அட்டவணையினை கருவூல அலுவலருக்கும் மற்றும் துறை தலைமை அலுவலருக்கும் யார் அனுப்பி வைக்கப்பட வேண்டும்

(A) District Collector
மாவட்ட ஆட்சியர்

(B) Assistant Divisional Engineer
உதவிக் கோட்டப் பொறியாளர்

(C) Divisional Engineer
கோட்டப் பொறியாளர்

(D) Chief Engineer
தலைமைப் பொறியாளர்

17. The ____________ is empowered to hire out tools and plants and machinery to local bodies and Private parties for a period not exceeding three months.
கருவிகள் மற்றும் தளவாடங்கள் வெளி வேலைக்கு உள்ளாட்சி துறைக்கோ அல்லது தனி நபருக்கோ மூன்று மாதங்களுக்கு மேல் மிகைபடாமல் வாடகை விட ———— அதிகாரம் உள்ளது.

(A) Assistant Engineer
உதவிப் பொறியாளர்

(B) Assistant Divisional Engineer
உதவிக் கோட்டப் பொறியாளர்

(C) Divisional Engineer
கோட்டப் பொறியாளர்

(D) Superintending Engineer
கண்காணிப்புப் பொறியாளர்

18. Who should watch the revenue being collected in his sub division close and check the recoveries made against the demands?
உட்கோட்டத்தில் வருவாய் வசூலிப்பு கேட்போலை மீது மிகவும் உன்னிப்பாக ஆய்வு செய்து ———— ரால் வசூல் செய்ய கண்காணிக்கப்பட வேண்டும்.

(A) Road Inspector
சாலை ஆய்வாளர்

(B) Assistant Engineer
உதவிப் பொறியாளர்

(C) Assistant Divisional Engineer
உதவிக் கோட்டப் பொறியாளர்

(D) Superintendent
கண்காணிப்பாளர்

19. Who should maintain a Miscellaneous property register for the revenue earning trees and should be submitted to the Divisional office monthly for review?
யார் பலவகை முன் பண கணக்கு சொத்து பதிவேடு பராமரிக்க வேண்டும், மேலும் இதனை ஒவ்வொரு மாதமும் கோட்டப்பொறியாளருக்கு ஆய்வுக்கு அனுப்ப வேண்டும்

(A) Assistant Engineer
உதவிப் பொறியாளர்

(B) Road Inspector
சாலை ஆய்வாளர்

(C) Assistant Divisional Engineer
உதவிக் கோட்டப் பொறியாளர்

(D) Superintendent
கண்காணிப்பாளர்

20. Who is responsible to obtain the cash remittance slips form the Assistant Engineer every month?
ஒவ்வொரு மாதமும் உதவிப் பொறியாளரிடமிருந்து அரசு கணக்குத் தொகை செலுத்தப்பட்டதற்கான சலானை பெறுவது யார் பொறுப்பு?

(A) Superintendent
கண்காணிப்பாளர்

(B) Road Inspector
சாலை ஆய்வாளர்

(C) Assistant Divisional Engineer
உதவிக் கோட்டப் பொறியாளர்

(D) Junior Assistant
இளநிலை உதவியாளர்

21. Who should submit to the monthly return on total revenue due for collection amount collected in the month and the balance due to the Divisional Engineer?
ஒவ்வொரு மாதம் வருவாய் வசூல் தொடர்பாக ஒட்டு மொத்தமாக வசூலிக்கப்பட வேண்டிய தொகை எவ்வளவு இந்த மாதத்தில் வசூலிக்கப்பட்டது எவ்வளவு மற்றும் மீதம் வசூலிக்கப்பட வேண்டியது குறித்த ———— ரால் கோட்டப்பொறியாளருக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

(A) Superintendent
கண்காணிப்பாளர்

(B) Divisional Accountant
கோட்ட கணக்கர்

(C) Assistant Divisional Engineer
உதவிக் கோட்டப் பொறியாளர்

(D) Assistant Engineer
உதவிப் பொறியாளர்

22. Who should maintain a list of surplus materials in his sub division?
உபரியாக உள்ள தளவாட மற்றும் மூலப்பொருட்கள் குறித்த பட்டியல் யார் பராமரிக்க வேண்டும்?

(A) Assistant Engineer
உதவிப் பொறியாளர்

(B) Road Inspector
சாலை ஆய்வாளர்

(C) Assistant Divisional Engineer
உதவிக் கோட்டப் பொறியாளர்

(D) Record Assistant
பதிவி உதவியாளர்

23. Divisional Accountant will inspect the sub division office with reference to Part I of the Inspection Report he will inspect specific areas in Part II under orders of the
கோட்டக்கணக்கர் உட்கோட்ட அலுவலகத்தினை வருடாந்திர ஆய்வு மேற்கொள்ளும் பொழுது ஆய்வு அறிக்கை பகுதி – Iல் அனைத்து பகுதியினை ஆய்வு செய்யப்பட வேண்டும். மேலும் பகுதி – IIல் உள்ள ஆய்வறிக்கை மீது ஆய்வு செய்ய ———— ஒப்புதல் ஆணை பெறப்பட வேண்டும்.

(A) Superintending Engineer
கண்காணிப்புப் பொறியாளர்

(B) Assistant Divisional Engineer
உதவிக் கோட்டப் பொறியாளர்

(C) Divisional Engineer
கோட்டப் பொறியாளர்

(D) Chief Engineer
தலைமைப் பொறியாளர்

24. ____________ On behalf of the Divisional Engineer will render monthly Accounts with schedules and Vouchers to the Accounts officer by each month.
கோட்டப் பொறியாளர் சார்பாக மாதாந்திர கணக்குகள் செலவினப்பட்டியல் செலவு சீட்டுகள் உட்பட மாதமாதம் 7ந் தேதி அன்று ————ரால் கணக்கு அலுவலருக்கு அறிக்கை அனுப்பப்பட வேண்டும்.

(A) Assistant Engineer
உதவிப் பொறியாளர்

(B) Superintendent
கண்காணிப்பாளர்

(C) Divisional Accountant
கோட்டக் கணக்கர்

(D) Budget Assistant
வரவு செலவு காணும் உதவியாளர்

25. The ____________ is responsible for bringing prominently to the notice of the Divisional Engineer all irregular transaction in which his office or his subordinate officer.
வரவு செலவு இனங்களில் கோட்டப் பொறியாளர் அலுவலகத்திலோ அவரது சார்நிலை அலுவலகத்தில் முறைகேடு கண்டறியப்பட்டால் கோட்டப்பொறியாளரது கவனத்திற்கு கொண்டு வருவது ———— கடமையாகும்.

(A) Assistant Engineer
உதவிப் பொறியாளர்

(B) Assistant Divisional Engineer
உதவிக் கோட்டப் பொறியாளர்

(C) Divisional Accountant
கோட்டக் கணக்கர்

(D) Superintendent
கண்காணிப்பாளர்

26. The ____________ Primarily and the Divisional Accountant Secondary will be held personally responsible for losses resulting in non-realisation of miscellaneous properties.
பல்வகை சொத்து கணக்கு-ன் மூலம் வசூலிக்கப்பட வேண்டிய வருவாய் இழப்பு ஏற்பட்டால், முதலாவதாக ———— இரண்டாவதாக கோட்டக் கணக்கரும் பொறுப்பு ஏற்க நேரிடும்.

(A) Assistant Divisional Engineer
உதவிக் கோட்டப் பொறியாளர்

(B) Assistant Engineer
உதவிப் பொறியாளர்

(C) Divisional Engineer
கோட்டப் பொறியாளர்

(D) Superintending Engineer
கண்காணிப்புப் பொறியாளர்

27. Who may sanction photograph charger within the limits of budget provision?
புகைப்படம் எடுப்பதினால் ஏற்படும் செலவினத்தை யாரால் ஒப்பளிப்பு ஆணை வழங்க இயலும்?

(A) Superintending Engineer
கண்காணிப்புப் பொறியாளர்

(B) Assistant Engineer
உதவிப் பொறியாளர்

(C) Divisional Engineer
கோட்டப் பொறியாளர்

(D) Assistant Divisional Engineer
உதவிக் கோட்டப் பொறியாளர்

28. Where daily payment exceeds Rs.500/- It should be disbursed by an officers of not lower in rank than an
——— அந்தஸ்து உடைய அதிகாரி தினமும் ரூ. 500/-க்கு மேல் உள்ள செலவினங்களுக்கு பட்டுவாடா செய்ய அதிகாரம் உண்டு.

(A) Assistant Engineer
உதவிப் பொறியாளர்

(B) Assistant Divisional Engineer
உதவிக் கோட்டப் பொறியாளர்

(C) Thasildar
வட்டாட்சியர்

(D) District Collector
மாவட்ட ஆட்சியர்

29. Method, the contractor agrees to execute a complete work in accordaness with specification for lumpsum payment
ஒப்பந்தக்காரர் ஏற்றுக்கொண்டு செயல்படுத்தி முடிக்கும்நிலை ஆனது விதிகளுக்குட்பட்டு மதிப்பீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ள ஷரத்துகளின்படி செயல்படுத்தி ஒட்டுமொத்த தொகை பெறுவது ——— ஆகும்.

(A) Pice work Agreement
சிறு வேலை ஒப்பந்தம்

(B) Single tender system
ஒற்றை ஒப்பந்த நடைமுறை

(C) Limited Tender system
வரையறுக்கப்பட்ட ஒப்பந்தம்

(D) Lumpsum tenders system
காலம் வரையோடு கூடிய ஒட்டுமொத்த ஒப்பந்தம்

30. The Assistant Engineer should get back the Duplicate slip of R.M. Slip duly acknowledge by the ___________ and paste them in the R.M. Slip.
செலுத்து சிட்டிற்குரிய ஒப்புகையின் நகலினை ——— ரிடமிருந்து பெற்று செலுத்தி சிட்டு பதிவேட்டில் ஒட்டப்பட வேண்டும்.

(A) Divisional Accountant
கோட்டக் கணக்கர்

(B) Supertendent
கண்காணிப்பாளர்

(C) Assistant Divisional Engineer
உதவிக் கோட்டப் பொறியாளர்

(D) Divisional Engineer
கோட்டப் பொறியாளர்

31. Who will pass orders for the sale of the usufructs of the trees by public auction in the usual manner in accordance with the rules immediately in the expiry of 30 days in the absence of a communication from the panchayat concerned?
பலன் தரும் மரங்கள் தொடர்பாக பஞ்சாயத்துக்களுக்கு கடிதம் எழுதி 30 நாட்களுக்குள் பதில் வரவில்லையெனில் பலன் தரும் மரங்கள் மீது பொது ஏலம் விடுவதற்கு யார் ஒப்பளிப்பு ஆணை வழங்குவார்?

(A) Assistant Engineer
உதவிப் பொறியாளர்

(B) Assistant Divisional Engineer
உதவிக் கோட்டப் பொறியாளர்

(C) Divisional Engineer
கோட்டப் பொறியாளர்

(D) Superintending Engineer
கண்காணிப்புப் பொறியாளர்

32. Who may dispose of temporary building or structures required for and charged to works?
வேலைத்தலைப்பின் கீழ் பற்று வைத்து தற்காலிக கட்டிடங்கள் பெற்றிடவும் மேலும் தற்காலிக கட்டிடங்கள் அகற்றிடவும் யாருக்கு அதிகாரம் உள்ளது?

(A) Assistant Engineer
உதவிப் பொறியாளர்

(B) Divisional Engineer
கோட்டப் பொறியாளர்

(C) Assistant Divisional Engineer
உதவிக் கோட்டப் பொறியாளர்

(D) Divisional Accountant
கோட்டக் கணக்கர்

33. Who will take the help of revenue department for acquiring lands for the Project?
வருவாய்த்துறை மூலம் திட்டபணிகளுக்கென நிலகையகம் செய்யும் நிகழ்வுகளில் அவர்களுக்கு உதவியாக யார் நடவடிக்கை எடுக்க வேண்டும்?

(A) Divisional Engineer
கோட்டப் பொறியாளர்

(B) Divisional Accountant
கோட்டக் கணக்கர்

(C) Superintendent
கண்காணிப்பாளர்

(D) None of these
இவை எதுவுமில்லை

34. Who will sanction the daily allowance to drivers, cleaners, firemen of Rollers and lorries in excess of 10 days but not exceeding 30 days?
30 நாட்களுக்கு மிகைப்படாமல் 10 நாட்களுக்கு மேல் துலக்குநர், சுமையுந்து ஓட்டுநர், உருளை ஓட்டுநர் எரிபொருள் மேற்கொள்ளபவர் ஆகியோருக்கு தினசரி படியினை வழங்க யார் ஒப்பளிப்பு செய்வார்?

(A) Divisional Engineer
கோட்டப் பொறியாளர்

(B) Assistant Engineer
உதவிப் பொறியாளர்

(C) Assistant Divisional Engineer
உதவிக் கோட்டப் பொறியாளர்

(D) None of these
இவை எதுவுமில்லை

35. On completion of a public building the ___________ should inform the local body so that property tax is assessed.
பொதுமக்கள் பயன்படுத்தும் கட்டிட பணிகள் முடித்தவுடன் உள்ளாட்சி அமைப்புக்கு உடனடியாக ————————ரால் தெரியப்படுத்தி சொத்து வரி செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(A) Divisional Engineer
கோட்டப் பொறியாளர்

(B) Assistant Engineer
உதவிப் பொறியாளர்

(C) Assistant Divisional Engineer
உதவிக் கோட்டப் பொறியாளர்

(D) Superintending Engineer
கண்காணிப்புப் பொறியாளர்

36. The Divisional Engineer is responsible for reporting any alteration or addition made to buildings in his territorial area by ___________ of each year.
கோட்டப்பொறியாளர் தனது எல்லைக்குட்பட்ட இடங்களில் பராமரிக்கப்படும் கட்டிடங்களில் மாறுபாடு செய்யவோ அல்லது கூடுதல் இனம் செயல்படுத்த ஒவ்வொரு வருடம் ———————— மாதத்தில் பொறுப்புடன் செயல்பட வேண்டும்.

(A) April
ஏப்ரல்

(B) May
மே

(C) June
ஜூன்

(D) July
ஜூலை

37. Who will permit similar structure on the P.W.D channels once it is approved on one road provided there is no change?
பொதுப் பணித்துறை வாய்க்காலில் கட்டுப்பட்டுள்ள பாலங்கள் போல் ஒத்த சாலையில் சாலை அமைக்கும் பொழுது பாலங்கள் கட்டுவதற்கு யார் அனுமதிப்பார்?

(A) Superintending Engineer
கண்காணிப்புப் பொறியாளர்

(B) Assistant Engineer
உதவிப் பொறியாளர்

(C) Divisional Engineer
கோட்டப் பொறியாளர்

(D) Assistant Divisional Engineer
உதவிக் கோட்டப் பொறியாளர்

38. Who has a right to seek the advice of the Accountant General or the Accounts Officers (Highways) as they case may be
கணக்கு அலுவலரிடமோ அல்லது மாநில கணக்காயரிடமோ கணக்கு சம்பந்தமான ஆலோசனை குறித்து கோருவதற்கு யாருக்கு உரிமை உள்ளது

(A) Assistant Engineer
உதவிப் பொறியாளர்

(B) Divisional Engineer
கோட்டப் பொறியாளர்

(C) Assistant Divisional Engineer
உதவிக் கோட்டப் பொறியாளர்

(D) Divisional Accountant
கோட்டக் கணக்கர்

39. Who should update the Miscellaneous property Register by obtaining details from the Assistant Engineer?
உதவிப் பொறியாளரிடமிருந்து கிடைக்கப்பெறும் விவரங்கள் கொண்டு, பலவகை சொத்து கணக்கு பதிவேட்டில் யார் உடனுக்குடன் பதிவு செய்யப்பட வேண்டும்

(A) Divisional Accountant
கோட்டக் கணக்கர்

(B) Superintendent
கண்காணிப்பாளர்

(C) Assistant Divisional Engineer
உதவிக் கோட்டப் பொறியாளர்

(D) None of these
இவை எதுவுமில்லை

40. Who will be solely responsible for the issue of objection on account of excess over or want of Estimates?
மதிப்பீட்டின் மீது கூடுதல் செலவினம் அல்லது மதிப்பீடு ஒப்பளிப்பு இல்லாமல் செலவினம் தொடர்பாக தணிக்கை குறிப்பு பெறும் பொழுது யார் முழு பொறுப்பாவார்?

(A) Divisional Accountant
கோட்டக் கணக்கர்

(B) Assistant Engineer
உதவிப் பொறியாளர்

(C) Superintandent
கண்காணிப்பாளர்

(D) None of these
இவை எதுவுமில்லை

41. The Maximum limit of time allowed to each division for return of each Audit note is
தணிக்கை குறிப்பு மீது ஒவ்வொரு ———— நாட்களுக்குள் பதில் அளிக்க கால அவகாசம் அனுமதிக்கப்படுகிறது.

(A) 15 days
15 நாட்கள்

(B) 7 days
7 நாட்கள்

(C) 3 days
3 நாட்கள்

(D) 5 days
5 நாட்கள்

42. Transfer of parts from the plant to another plant of a different make should not be done without the consent of the

கருவிதளவாட இனங்களில் உதிரிபாகங்கள் மாறுப்பட்ட இனங்களான கருவி தளாவடங்களில், ———— ரது ஒப்புதல் இல்லாமல் பொறுத்த கூடாது.

(A) Divisional Engineer
கோட்டப் பொறியாளர்

(B) Assistant Engineer
உதவிப் பொறியாளர்

(C) Assistant Divisional Engineer
உதவிக் கோட்டப் பொறியாளர்

(D) None of these
இவை எதுவுமில்லை

43. In respect of Highways Department mathematical and Scientific drawing and survey instrument (Except testing equipments) will be stocked by

நெடுஞ்சாலைத்துறையில் கணித மற்றும் விஞ்ஞான அளவிடும் செய்யும் கருவிகள் (பரிசோதனை செய்யும் கருவிகள் தவிர்த்து) ———— ரால் இருப்பு வைக்கப்படும்.

(A) Divisional Engineer
கோட்டப் பொறியாளர்

(B) Assistant Engineer
உதவிப் பொறியாளர்

(C) Assistant Divisional Engineer
உதவிக் கோட்டப் பொறியாளர்

(D) Stock keeper
கிடங்கு காவல்

44. A rate book or schedule of rates showing the lowest rate at which metal can be supplied to the road side through out the division should be kept in the division office in form

கோட்ட அலுவலகத்தில் ———— படிவத்தில் சாலை ஓரங்களில் கோட்டம் முழுவதும் குறைந்த விலையில் சரளைகள் பெற்றிட விலை புத்தகம் அல்லது விலை விகித அட்டவணை வைத்திருக்க வேண்டும்.

(A) P.W.A V

(B) P.W.A XX

(C) P.W.A XXX

(D) P.W.A XXV

45. The recovery of all debits due to government should receive the Special attention of the __________ no debit should be remitted or written off except under the orders of competent authority.

அரசுக்கு சேர வேண்டிய கடன் தொகை சிறப்பு கவனம் செலுத்தி ———— ரால் வசூலிக்கப்பட வேண்டும். தகுதியுள்ள அலுவலரின் உத்தரவு இல்லாமல் கடன் தொகையின் மீது தொகை செலுத்த கூடாது.

(A) Assistant Engineer
உதவிப் பொறியாளர்

(B) Divisional Engineer
கோட்டப் பொறியாளர்

(C) Superintending Engineer
கண்காணிப்புப் பொறியாளர்

(D) Assistant Division Engineer
உதவிக் கோட்டப் பொறியாளர்

46. ____________ concerned is responsible for the proper management and efficient utilization of machinery available of the division.
கோட்டத்தில் இருப்பில் உள்ள கருவி தளவாடங்களை முறையாக சமாளிக்கவும், திறமையாக பயன்படுத்தவும் ———— பொறுப்பாவார்.

(A) Divisional Accountant
கோட்டக் கணக்கர்

(B) Divisional Engineer
கோட்டப் பொறியாளர்

(C) Assistant Engineer
உதவிப் பொறியாளர்

(D) Assistant Divisional Engineer
உதவிக் கோட்டப் பொறியாளர்

47. The primary responsibility for the maintenance of the plant record book which will kept with plant lies with
பராமரிப்பில் உள்ள தளவாடத்திற்குரிய ஆவணங்கள் பாதுகாப்பது ———— ரது தலையாய கடமையாகும்.

(A) Assistant Engineer
உதவிப் பொறியாளர்

(B) Assistant Divisional Engineer
உதவிக் கோட்டப் பொறியாளர்

(C) Divisional Engineer
கோட்டப் பொறியாளர்

(D) Superintending Engineer
கண்காணிப்புப் பொறியாளர்

48. The Assistant Engineer in charge of the plant will forward a ____________ periodically to the Assistant Divisional Engineer after verification with log book.
தளவாடத்திற்கு பொறுப்புள்ளவரான உதவிப் பொறியாளர் ———— காலமுறையாக உதவிக்கோட்டப் பொறியாளரது ஆய்வுக்காகவும், தினசரி நாட்குறிப்பு புத்தகத்துடன் ஒப்பிட்டு பார்க்கும் பொருட்டு அனுப்ப வேண்டும்.

(A) daily log sheet
தினசரி நாட்குறிப்பு

(B) daily trip sheet
தினசரி பயணத்தாள்

(C) daily report
தினசரி அறிக்கை

(D) daily trip report
தினசரி பயண அறிக்கை

49. The log reports for all lorries received in a month should be consolidated and submitted to the ____________ for review by 15th of each month.
மாதந்தோறும் அனைத்து சுமையுந்துகளின் தினசரி நாட்குறிப்புகள் மாதந்தோறும் பெற்று ஒருங்கிணைந்து ஒவ்வொரு மாதமும் 15ந் தேதியன்று ———— ரது ஆய்வுக்காக சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(A) Assistant Engineer
உதவிப் பொறியாளர்

(B) Assistant Divisional Engineer
உதவிக் கோட்டப் பொறியாளர்

(C) Divisional Engineer
கோட்டப் பொறியாளர்

(D) Divisional Accountant
கோட்டக் கணக்கர்

50. A separate register in form __________ should be maintained to watch the receipt of fortnightly log reports for lorries and rollers to effect the adjustment of hire charges.
சுமையுந்து இருவார தினசரி நாட்குறிப்பு வாயிலாக வாடகை சரிகட்டல் மூலம் கிடைக்கப்பெறும் அரசின் வருவாய் குறித்து ———— படிவத்தில் பதிவேடு பராமரிக்கப்பட வேண்டும்.

(A) P.W.D XV-7a
(B) P.W.D XV - 7b
(C) P.W.D XV - 7c
(D) P.W.D XV - 13

51. The Register of stock form __________ should be maintained.
சேமிப்பு கிடங்கு பதிவேடு படிவம் ————-ல் பராமரிக்கப்பட வேண்டும்.

(A) P.W.A. XXX
(B) P.W.A. XXV
(C) P.W.A. XII
(D) P.W.A. XIII

52. In which form __________ the Register of Rents of Buildings and Lands should be maintained in the Divisional office?
கோட்ட அலுவலகத்தில் வாடகை மற்றும் நிலங்கள் குறித்த பதிவேடு எந்த படிவத்தில் பராமரிக்கப்பட வேண்டும்

(A) P.W.A. XIII
(B) P.W.A. XXV
(C) P.W.A. XXX
(D) P.W.A. XII

53. Under part II is completed __________ should write up his report in Part III and submit it to the Divisional Officer, who will then review the Register of Stock and record his remarks and orders in Part III.
சேமிப்பு கிடங்கு பதிவேடு பகுதி–II __________ ஆல் ஆய்வு செய்த பிறகு பகுதி-III–ல் சேமிப்பு கிடங்கு பதிவேடு ஆய்வு செய்யப்பட்ட பொழுது கண்டறியப்பட்ட கருத்துருக்கள் குறித்து கோட்டப் பொறியாளருக்கு தெரிவித்து அதன் மீது உத்தரவு பெறப்பட வேண்டும்.

(A) Assistant Engineer
உதவிப் பொறியாளர்
(B) Divisional Accountant
கோட்டக் கணக்கர்
(C) Assistant Divisional Engineer
உதவிக் கோட்டப் பொறியாளர்
(D) Road Inspector
சாலை ஆய்வாளர்

54. Any errors that may be discovered in the Register of receipts in the Register of Receipts and issues or in the monthly abstracts before the accounts for the month are closed should be set right by the

மாதாந்திர கணக்கு முடிக்கும் பொழுது வரவு-செலவு இனங்களில் பிழைகள் ஏதும் கண்டறியப்பட்டால் ———— ஆல் சரி செய்து பின் அறிக்கை சமர்பிக்கப்பட வேண்டும்.

(A) Superintending Engineer
கண்காணிப்புப் பொறியாளர்

(B) Chief Engineer
தலைமைப் பொறியாளர்

(C) Assistant Engineer
உதவிப் பொறியாளர்

(D) Sub-Divisional officer
உதவிக் கோட்ட அலுவலர்

55. Un used balances of road metal should be verified at least ———— by the Sub-Divisional officer.

உபயோகப்படாத இருப்பில் உள்ள சரளை கற்களை ———— உதவிக் கோட்டப் பொறியாளரால் சரிபார்க்கப்பட வேண்டும்.

(A) 3 Months
3 மாதங்களுக்கு ஒருமுறை

(B) 6 Months
ஆறு மாதங்களுக்கு ஒருமுறை

(C) Once in a year
வருடத்திற்கு ஒருமுறை

(D) 9 Months
ஒன்பது மாதங்களுக்கு ஒருமுறை

56. Un used balances of road metal should be maintained in a Register in Form

உபயோகப்படாத சரளை கற்கள் குறித்து படிவம் ————ல் விவரங்களை பூர்த்தி செய்து பராமரிக்கப்பட வேண்டும்.

(A) P.W.A. IV

(B) P.W.A. III

(C) P.W.A. XXX

(D) P.W.A. XXV

57. Who is responsible that when tools and plant are disposed of, by sale or otherwise with the sanction of the competent authority?

உரிய தகுதியுள்ள அலுவலரிடமிருந்து ஒப்புதல் பெற்ற பின்பு பழுதடைந்த கருவி தளவாடங்களை விற்கவோ அல்லது தீர்வு காணவோ யார் பொறுப்பானவர்?

(A) Assistant Engineer
உதவிப் பொறியாளர்

(B) Sub-Divisional officer
உதவிக் கோட்ட அலுவலர்

(C) Divisional Engineer
கோட்டப் பொறியாளர்

(D) Superintending Engineer
கண்காணிப்புப் பொறியாளர்

58. In which form sale account should be prepared in support of every transaction
ஒவ்வொரு மாத வரவு, செலவு கணக்குடன் சேர்த்து விற்பனை கணக்கினையும் எந்த படிவத்தில் புள்ளி விவரங்கள் பூர்த்தி செய்து உரிய ஆவணங்களுடன் தயார் செய்யப்பட வேண்டும்

(A) P.W.A. VII (B) P.W.A. III
(C) P.W.A. XXV (D) P.W.A. XXX

59. When tools and plant are transferred to other Division or Department ________ should note their value in Form P.W.A II in red ink just below the entries of quantities if the value is recoverable under the rules in section 9.
கருவி தளவாடங்களுக்கு வேறு கோட்டத்திற்கு அல்லது வேறு துறைக்கு மாற்றம் செய்யப்படும் பொழுது ________ அவர்கள் படிவம் P.W.A II சிவப்பு மையினால் விதிகளின் படி பிரிவு எண்-9-ன் படி (ஒரு வேளை) அக்கருவித்தளவாடங்களில் பிடித்தம் செய்ய வேண்டிய பணமதிப்பு குறித்து பதிவு செய்து பட்டியலுடன் அனுப்பபட வேண்டும்.

(A) Assistant Engineer
உதவிப் பொறியாளர்
(B) Sub-Divisional officer
உதவிக் கோட்ட அலுவலர்
(C) Divisional Engineer
கோட்டப் பொறியாளர்
(D) District Collector
மாவட்ட ஆட்சித் தலைவர்

60. On completion of work or Project on which special tools and Plants were used or when these tools and plants are no longer requested for use thereon ________ concerned may transfer them in efficient condition to another work or any other division where they may be requested for immediate use.
பணி முடிவுற்ற பிறகு திட்ட பணிகளுக்கு பயன்படுத்திய சிறப்பு கருவிகள் மற்றும் தளவாடங்கள் நீண்ட கால பயன்பாட்டிற்கு தேவைப்படவில்லையெனில் ________ அவர்கள் சிறப்பு கருவிகள் மற்றும் தளவாடங்கள் நல்ல நிலையில் இருக்கும் பொழுதே தேவைப்படும் வேறு கோட்டத்திற்கு அல்லது வேறு வேலைக்கோ அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(A) Assistant Engineer
உதவிப் பொறியாளர்
(B) Assistant Divisional Engineer
உதவிக் கோட்டப் பொறியாளர்
(C) Divisional Engineer
கோட்டப் பொறியாளர்
(D) Chief Engineer
தலைமைப் பொறியாளர்

61. In case of where the ____________ is of opinion that tools and plants are in such a bad condition that they will not be valued even at an amount equal to the transport charges that may have to be incurred he should take necessary action to dispose of them locally or write them off case with the sanction of competent authority.

கருவி தளவாடங்கள் நிலையானது, ஒரு வேலை பயன்படுத்த முடியாமல் மோசமான நிலையில் இருந்தால் தகுதியுள்ள அலுவலரிடம் ஒப்புதல் பெற்று அத்தளவாடங்கள் போக்குவரத்து மூலம் எடுத்து சென்று சரி செய்ய ஆகும். நிலையினை கணக்கிட்டு அத்தளவாடங்களது மதிப்பினை கணக்கிட்டும் உள்ளூரிலேயே அதனை விற்பனை செய்ய ————ல் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

(A) Divisional Engineer
கோட்டப் பொறியாளர்

(B) Assistant Engineer
உதவிப் பொறியாளர்

(C) Divisional Engineer
உதவிக் கோட்ட பொறியாளர்

(D) Chief Engineer
தலைமைப் பொறியாளர்

62. When the materials from stock, the store-keeper (or) sectional officer should examine one indent from ____________ and sign it.

சேமிப்பு கிடங்கு காவலரால் பராமரிக்கப்படும் பொருட்கள் அல்லது பொருட்கள் கொள்முதல் செய்த வகையில் சேமிப்பு கிடங்குக்கு வந்திருக்கும் பொழுது படிவம் ————ல் பதிவு செய்துள்ளதை பண்டக காப்பாளர் (அல்லது) பிரிவு அலுவலரால் ஆய்வு செய்து அதில் சுருக்கொப்பம் இட வேண்டும்.

(A) P.W.A. X

(B) P.W.A. XX

(C) P.W.A. XXX

(D) P.W.A. XXV

63. Where there is a difference of opinion between the ____________ and the Accountant General, orders of the Government shall be obtained for the storage charges to be fixed.

பொருட்கள் சேமித்து வைத்து கொள்வதற்கான தொகை வழங்குவதில் ————க்கும் மற்றும் மாநில கணக்காயருக்கும் கருத்து வேறுபாடு ஏற்படின் இது குறித்து அரசிடமிருந்து உரிய ஒப்புதல் ஆணை பெறப்பட வேண்டும்.

(A) Chief Engineer
தலைமைப் பொறியாளர்

(B) Divisional Engineer
கோட்டப் பொறியாளர்

(C) Superintending Engineer
கண்காணிப்புப் பொறியாளர்

(D) Assistant Engineer
உதவிப் பொறியாளர்

64. Who is responsible that the value of materials sold to municipalities local fund and the public and of issues made to contractors for private is recovered in cash at the earliest opportunity?
பொருட்கள், உள்ளாட்சி அமைப்பு நகராட்சி அல்லது ஒப்பந்தக்காரருக்கு விற்கும் பொழுது அதன் மூலம் கிடைக்கப் பெறும் வருவாய்-ஐ விரைந்து வசூலிக்க வேண்டியது யார் பொறுப்பு?

(A) Section officer
பிரிவு அலுவலர்

(B) Sub-Divisional Officer
உதவிக் கோட்ட அலுவலர்

(C) Executive Engineer
செயற் பொறியாளர்

(D) Superintending Engineer
கண்காணிப்புப் பொறியாளர்

65. For every Transfer entry either a Transfer Entry order should be prepared in form
ஒவ்வொரு மாற்று பதிவு குறித்த பதிவுகள் அல்லது மாற்று பதிவு ஆணைகள் யாவும் ——— படிவத்தில் பூர்த்தி செய்து தயாரிக்கப்பட வேண்டும்.

(A) P.W.A. VIII

(B) P.W.A. VII

(C) P.W.A. XXX

(D) P.W.A. XXV

66. All transfer entries which have been approved for action should be registered in the transfer entry book form ___________ maintained in the Divisional Office.
கோட்ட அலுவலகத்தில் மாற்று பதிவு ஆணையின் மீது ஒப்புதல் ஆணை பெற்றவுடன் ——— படிவத்தில் புள்ளி விவரங்கள் பதிவு செய்து மாற்று பதிவாணை பதிவேடு பராமரிக்கப்பட வேண்டும்.

(A) P.W.A. VII

(B) P.W.A. VII

(C) P.W.A. XX

(D) P.W.A. XXX

67. When a recovery has been ordered to be made form a contractor or other person it should be noted at once in a Register of miscellaneous Recoveries in form ___________ for the purpose so that amount recovered from time to time.
ஒப்பந்தக்காரர் அல்லது மற்ற தனிநபருக்கோ தொகை பிடித்தம் செய்வது குறித்து உத்தரவு பிறப்பிக்கப்படும் பொழுது பல்வகை முன்பண பிடித்த பதிவேட்டிற்கான ——— படிவத்தில் விவரங்களை பதிவு செய்து உடனுக்குடன் தொகை பிடித்தம் செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்?

(A) P.W.A. XX

(B) P.W.A. XIV

(C) P.W.A. XXX

(D) P.W.A. XXV

68. The recoveries of expenditure in respect of tools and plant appearing in the register of revenue
கருவிகள் தளவாடங்கள் பயன்படுத்திய வகையில் பிடித்தம் செய்யப்பட செலவினங்கள் வருவாய் இன பதிவேடு ————ல் பதிவு செய்து பராமரிக்க வேண்டும்.

(A) P.W.A. XXXVII
(B) P.W.A. XX
(C) P.W.A. XXX
(D) P.W.A. XXV

69. Payment on a casual labour roll in form __________ in which the names of the laboures are not given should not be made except by a gazetted Government Servant.
சாதாரண கூலி தொழிலாளிக்கு வேலை செய்தமைக்குரிய தொகையினை ———— படிவத்தில் விவரங்கள் பூர்த்தி செய்து தொகை வழங்கப்பட வேண்டும் ஆனால் அரசிதழ் பதிவு பெற்ற அரசு ஊழியரது பெயரை இந்தப் படிவத்தில் கொண்டுவரக் கூடாது.

(A) P.W.A. XVI
(B) P.W.A. XX
(C) P.W.A. XXI
(D) P.W.A. XXX

70. On the 30th April each year the __________ should send a certificate to the Superintending Engineer that all standard measurement books in his division have been inspecified by him.
ஒவ்வொரு வருடமும் ஏப்ரல் 30-ம் தேதி அன்று நிலையான அளவு புத்தங்கள் ஆய்வு செய்தமைக்கான சான்றிதழினை ————ரால் கண்காணிப்புப் பொறியாளருக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

(A) Section officer
பிரிவு அலுவலர்
(B) Sub-Divisional officer
உதவிக் கோட்ட அலுவலர்
(C) Divisional officer
கோட்ட அலுவலர்
(D) Divisional Accountant
கோட்டக் கணக்கர்

71. Every page of M.Book reviewed should be intialled and dated by the __________ with the remark "reviewed" and the correspondence entry made in the register.
அளவு புத்தகத்தில் ஒவ்வொரு பக்கத்தினையும் ஆய்வு செய்து அதற்குரிய பதிவேட்டில் இணையாக ஆய்வு செய்த விவரங்கள் குறிப்பிட்டு அளவு புத்தகத்தில் ஒவ்வொரு பக்கத்திலும் ————ல் சுருக்கொப்பமிடப்பட வேண்டும்.

(A) Divisional Accountant
கோட்டக் கணக்கர்
(B) Superintendent
கண்காணிப்பாளர்
(C) Sectional Officer
பிரிவு அலுவலர்
(D) Sub-divisional officer
உதவிக் கோட்ட கணக்கர்

72. Which department has the authority to sell Government owned land as assets?
அரசுக்கு சொந்தமான நிலங்களை சொத்துக்களை விற்க எந்த துறைக்கு அதிகாரம் உள்ளது?

(A) Revenue Department
வருவாய்த் துறை

(B) Public Work Department
பொதுப்பணி துறை

(C) Police Department
காவல் துறை

(D) Highways Department
நெடுஞ்சாலைத் துறை

73. Form ____________ is intended for intermediate payments which may be made to the contractor in accordance with his contract.
ஒப்பந்தக்காரர் செய்து கொண்ட உடன்படிக்கை படியும் இடைநிலை பணபட்டுவாடாக்களை ———— படிவத்தின் மூலம் கண்காணிக்கப்படுகிறது.

(A) P.W.A.XXI
(B) P.W.A.XX
(C) P.W.A.XXX
(D) P.W.A.XXV

74. Form ____________ is intended for Final Payments made to the contractor.
இறுதி பட்டியலானது ———— படிவத்தின் மூலம் பணம் பட்டுவாடா ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்படுகிறது.

(A) P.W.A.XXII
(B) P.W.A.XX
(C) P.W.A.XXX
(D) P.W.A.XXV

75. Form ____________ is intended for all miscelleneous payment and advances through hand receipt.
கைரசீது படிவம் ————ன் மூலம் அனைத்து வகையின பலவகை முன்பண படிவத்தின் மூலம் இதரவகை செலவினங்களுக்கான தொகை பட்டுவாடா செய்தல் முண்பண தொகை வழங்குதல் போன்றவற்றினை கண்காணிக்கப்படுகிறது.

(A) Form No.476
படிவம் 476

(B) P.W.A.XX
P.W.A.XX

(C) P.W.A.XXX
P.W.A.XXX

(D) P.W.A.XXV
P.W.A.XXV

76. Before signing the bill __________ should be compare the quantities in the bill with those recorded in the measurement Book and see all the rates are correctly entered and that all calculation have been checked arithmetically.
பட்டியலில் கையொப்பமிடுவதற்கு முன்னர் அளவு புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள பொருட்களின் அளவு மற்றும் அதற்குரிய விலை விகிதம் ஆகியவற்றினை ஒப்பிட்டு பார்த்து (அளவுகளில் உள்ள பெருக்கல்களையும்) ———— ஆல் சரிபார்க்கப்பட வேண்டும்.

(A) Section Officer
பிரிவு அலுவலர்

(B) Sub-Divisional Officer
உதவிக் கோட்ட அலுவலர்

(C) Executive Engineer
செயற்பொறியாளர்

(D) Road Inspector
சாலை ஆய்வாளர்

77. A register in form __________ should be maintained in the Executive Engineer's office to watch the disposal from start to finish of all indents for stores placed by his on firms in India.
கோட்டப் பொறியாளர் அலுவலகத்தில் ———— படிவத்தில் சேமிப்பு கிடங்கில் ஆரம்பத்திலிருந்து தேவை கருதி கொள்முதல் செய்யும் பொருட்கள் அதனை பணிக்கு பயன்படுத்தி தீர்வு காணுதல் இது போன்ற விவரங்கள் கண்காணிக்க பதிவேடு பராமரிக்கப்பட வேண்டும்.

(A) P.W.A. XXIII

(B) P.W.A. XX

(C) P.W.A. XXV

(D) P.W.A. XXX

78. In case of firm bills not exceeding Rs.__________ the Assistant Engineer are empowered to pass such firm bills.
ரூ. ————/-க்கு மிகைப்படாமல் உள்ள நிறுவன பட்டியல்களை அங்கீகரிக்க உதவிப் பொறியாளருக்கு அதிகாரம் உண்டு.

(A) Rs. 500/-
ரூ. 500/-

(B) Rs. 1,000/-
ரூ. 1,000-

(C) Rs. 1,500/-
ரூ. 1,500/-

(D) Rs. 5,000/-
ரூ. 5,000/-

79. Payment should not be made for bricks at a supplies private kiln untill they are handed over to the charge of __________ officers.
தனியாா் செங்கல் சூளை கற்களுக்குரிய தொகை பட்டுவாடா செய்யக் கூடாது இதனை ———— துறையை சேர்ந்த அலுவலர்கள் கையாளுவார்கள்.

(A) PWD
பொதுபணித்துறை

(B) Highways
நெடுஞ்சாலைத்துறை

(C) Forest
வனத்துறை

(D) TWAD
தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

80. An advance payment for work actually executed may be made on the certificate of a responsible officer not below the rank of
உண்மையிலேயே வேலை செய்து முடிக்கப்பட்ட பணிகளுக்கு, பொறுப்புள்ள ———— அந்தஸ்து குறைவில்லா அலுவலரால் சான்றளிக்கப்பட்டு வழங்கப்படலாம்.

(A) Section officer
பிரிவு அலுவலர்

(B) Sub-Divisional officer
உதவிக் கோட்ட அலுவலர்

(C) Thasildar
வட்டாட்சியர்

(D) Road Inspector
சாலை ஆய்வாளர்

81. Wage of members of the work charged Establishment should be drawn and paid on form
———— படிவத்தில் விவரங்களை பூர்த்திசெய்து கூலிகள் மற்றும் வேலைநிதியில் ஊதியம் பெறும் பணியாளர்களது ஊதியம் பெறப்பட வேண்டும்.

(A) P.W.A. XXIV

(B) P.W.A. XX

(C) P.W.A. XXV

(D) P.W.A. XXX

82. Materials found in excess should be credited to the work under the appropriate sub-heads and shown as receipt in the column __________ in the work accounts.
பொருட்கள் அதிகமாக உள்ளதை கண்டறியப்பட்டால் வேலைத்தலைப்பில் சரியான உட்தலைப்பான ———— கணக்கில் வரவு வைத்து கணக்குகள் பராமரிக்க வேண்டும்.

(A) Material at site
வேலைத்தளத்தில் உள்ள பொருட்கள்

(B) Miscellaneous public work advance
பலவகை முன்பண கணக்குகள்

(C) Work shop suspense
தற்காலிக இடைநிறுத்த பணிமனை கணக்கு

(D) 1054 R&B revenue
1054 சாலைகள் மற்றும் பாலங்கள் வருவாய்

83. In which office the contractor ledger should be written up
எந்த அலுவலகத்தில் ஒப்பந்தகாரரது பதிவேடு எழுதி பராமரிக்கப்பட வேண்டும்

(A) Section Office
பிரிவு அலுவலகத்தில்

(B) Sub-Divisional office
உதவிக் கோட்ட அலுவலகத்தில்

(C) Divisional office
கோட்ட அலுவலகத்தில்

(D) Chief Engineer Office
தலைமை பொறியாளர் அலுவலகத்தில்

84. The contractor ledger Accounts should be closed and balanced
ஒப்பந்தகாரரது பதிவேடு ———— முடிக்கப்பட்டு இருப்பு நிலை சரிபார்க்கப்பட வேண்டும்.

(A) Monthly
மாதந்தோறும்

(B) Bi-monthly
இரண்டு மாதத்திற்கு ஒரு முறை

(C) Quarterly
காலாண்டிற்கு ஒருமுறை

(D) Half yearly
அரையாண்டிற்கு ஒருமுறை

85. Who is responsible for securing agreement?
ஒப்பந்த உடன்படிக்கைகள் யார் பாதுகாப்பில் வைத்திருக்க வேண்டும்?

(A) Superintendent
கண்காணிப்பாளர்

(B) Divisional Accountant
கோட்டக் கணக்கர்

(C) Senior Draughting officer
முதல்நிலை வரை தொழில் அலுவலர்

(D) Record clerk
பதிவுரு எழுத்தர்

86. The record of the monthly transaction connected with manufacture operation should be kept in the ____________ office.
மாதாந்திர வரவு செலவு குறித்து ———————— அலுவலகத்தில் பராமரிக்கப்படும் ஆவணங்களில் உற்பத்தி நடவடிக்கை குறித்தும் பாதுகாப்பாக பதிவு செய்திடல் வேண்டும்.

(A) Sectional
பிரிவு அலுவலகம்

(B) Sub-Divisional
உதவிக் கோட்ட அலுவலர்

(C) Divisional
கோட்ட அலுவலகத்தில்

(D) Circle
வட்ட அலுவலகத்தில்

87. The financial year terminates $31^{st}$ ____________ and actual transaction taking place after that date should on no account be treated as pertaining to that year.
நிதியாண்டு ———————— வுடன் முடிவடைகிறது. அந்த தேதிக்கு பிறகு நடைபெறும் வரவு-செலவுகள் முந்தைய வருட கணக்கில் கொண்டு செல்ல இயலாது.

(A) March
மார்ச்

(B) June
ஜூன்

(C) September
செப்டம்பர்

(D) December
டிசம்பர்

88. Who is responsible that all correction advised by the Accountant General are specially brought to the notice of the Divisional officer?
கோட்டப் பொறியாளரது கவனத்திற்கு மாநில கணக்காயரால் கொண்டு வரப்பட்ட ஆலோசனைகள் கணக்கு சம்மந்தமான அனைத்து குறைகளை களைய யார் பொறுப்பானவர்?

(A) Assistant Engineer
உதவிப் பொறியாளர்

(B) Divisional Accountant
கோட்டக் கணக்கர்

(C) Superintendent
கண்காணிப்பாளர்

(D) Assistant Divisional Engineer
உதவிக் கோட்டப் பொறியாளர்

89. Finally the monthly Account should be prepared in form ______ and this Account is an abstract of the entire receipts and disbursement of the month.
இறுதியாக மாதாந்திர கணக்கு தயாரிக்கும் பொழுது ———————— படிவத்தில் அனைத்து வரவுகள் மற்றும் பட்டுவாடா செய்யப்பட்ட செலவுகள் குறித்து புள்ளி விவரங்கள் பதிவு செய்த தயாரிக்கப்பட வேண்டும்.

(A) P.W.A. 42

(B) P.W.A. 17

(C) P.W.A. 40

(D) P.W.A. 20

90. For percentage recoveries made an account of Establishment tools and plant and account audit charges, a single schedule should be prepaid in form
கருவி தளவாடங்கள் பயன்படுத்திய வகையில் பிடித்தம் செய்யப்பட்ட வாடகை மற்றும் பணியாளர்கள் பணிக்கு பயன்படுத்திய வகையில் சம்பந்தமாக சதவிகித பிடித்தங்கள் ஆகியவை ஒரே அட்டவணை குறிப்பு படிவம் ————ல் குறிப்பிட்டு அறிக்கை தயார் செய்யப்பட வேண்டும்.

(A) P.W.A. 25
(B) P.W.A. 10
(C) P.W.A. 16
(D) P.W.A. 17

91. A list of misc pw-advance items out-standing for more than six months should be furnished to ___________ every half year with the monthly account for september and march.
மார்ச், செப்டம்பர் மாத கணக்குகளில் ஆறு மாத காலத்திற்கு மேல் நிலுவையில் உள்ள பல்வகை முன்பண கணக்கு விவரங்கள் அரையாண்டு அறிக்கையாக ————க்கு அனுப்பப்பட வேண்டும்.

(A) Accountant General
மாநில கணக்காயர்
(B) Head of the Department
துறைத் தலைவர்
(C) Superintending Engineer
கண்காணிப்புப் பொறியாளர்
(D) Divisional Engineer
கோட்டப் பொறியாளர்

92. The Divisional Officer should send the report described in note 2 under the article 230 in this regard to all deposit works should be sent in form
கட்டுரை எண்.230-ன் படி அனைத்து வகையான வைப்புத் தொகை குறித்து வரையறுக்கப்பட்ட படிவமான ————ல் கோட்டப் பொறியாளரால் அறிக்கை அனுப்பப்பட வேண்டும்.

(A) P.W.A.XI
(B) P.W.A.XX
(C) P.W.A.XXV
(D) P.W.A.XXX

93. Who is specially authorised by the Government to sanction the carriage handling etc., charges upto specified money limit?
வரையறுக்கப்பட்ட பணவரம்பிற்கு வண்டிவாகனங்களை கையாள சிறப்பு நிகழ்வாக யாருக்கு தொகை அங்கீகரிக்கப்படுகிறது.

(A) Sectional officer
பிரிவு அலுவலர்
(B) Sub-divisional officer
உதவிக் கோட்டப் பொறியாளர்
(C) Divisional Officer
கோட்ட அலுவலர்
(D) Superintending Engineer
கண்காணிப்புப் பொறியாளர்

94. All vouchers in support of payments for land acquired should be submitted to the
நிலகையக இனங்களில் பட்டுவாடா செய்த இனங்களுக்குரிய அனைத்து ஆவணங்களையும் ———— சமர்பிக்கப்பட வேண்டும்.

(A) Accountant General
மாநில கணக்காயர்

(B) Chief Engineer
தலைமைப் பொறியாளர்

(C) Superintending Engineer
கண்காணிப்புப் பொறியாளர்

(D) Treasury Officer
கருவூல அலுவலர்

95. Which works should comprise all new construction, addition and alteratin, to the existing works?
எந்த வேலை பணியில் புதிய கட்டுமான பணிகள் நடைமுறையில் உள்ள பணிகளில் கூடுதல் பணிசேர்க்கவோ அல்லது திருத்தியமைப்பதற்கான விவரங்கள் உள்ளடங்கியிருக்கும்?

(A) Original works
மூலப்பணி

(B) Special repair work
சிறப்பு பழுது வேலை பணி

(C) Ordinary maintenance works
சாதாரண பராமரிப்பு பணி

(D) None of these
இவை ஏதுமில்லை

96. Who should decide any item of tools and plant should be classified as ordinary or special?
கருவி தளவாட இனங்களில் சாதாரண வகையை சார்ந்ததா அல்லது சிறப்பு வகையான சார்ந்ததா என யார் தீர்மானிக்க வேண்டும்

(A) Chief Engineer
தலைமைப் பொறியாளர்

(B) Superintending Engineer
கண்காணிப்புப் பொறியாளர்

(C) Divisional Engineer
கோட்டப் பொறியாளர்

(D) Assistant Divisional Engineer
உதவிக் கோட்டப் பொறியாளர்

97. Which department is entrusted with the execution of Kudimaramath works?
குடிமராமத்து பணிகள் செயலாக்கம் செய்ய எந்த துறைக்கு ஒப்படைக்கப் பட்டிருக்கிறது

(A) Public works department
பொதுப்பணி துறை

(B) Highways department
நெடுஞ்சாலைத்துறை

(C) Forest department
வனத்துறை

(D) Revenue department
வருவாய்துறை

98. An entry once made in the __________ should in no circumstances be erased.
__________ பதிவேட்டில் ஒருமுறை பதிவு செய்த பிறகு எந்த ஒரு சூழ்நிலையிலும் அழிப்பான கொண்டு அழிக்கக் கூடாது.

(A) Cash book
ரொக்க கணக்கு புத்தகம்

(B) Imprest account book
முன்பண கணக்கு பதிவேடு

(C) Temporary advance account book
தற்காலிக முன்பண கணக்கு பதிவேடு

(D) Road metal account book
சரளை கற்கள் கணக்கு பதிவேடு

99. Which office should be maintained register in form P.W.A XVII and each m.book should be machine numbered?
எந்த அலுவலகத்தில் படிவம் P.W.A XVII – ல் அளவுபுத்தகத்தில் இயந்திரத்தின் மூலம் இலக்கம் எண் பதிவு செய்யப்பட்டு பதிவேடு பராமரிக்கப்படுகிறது?

(A) Sectional office
பிரிவு அலுவலகம்

(B) Divisional office
கோட்ட அலுவலகம்

(C) Sub-Divisional Office
உதவி கோட்ட அலுவலகம்

(D) Superintending Engineer Office
கண்காணிப்புப் பொறியாளர் அலுவலகம்

100. Which is called contractors other transaction?
ஒப்பந்தகாரரது இதர வரவு செலவுகள் குறித்து அழைக்கப்படுவது?

(A) The record of all other debits (or) credits
அனைத்து வகையான இதர வரவுகள் மற்றும் செலவுகள் குறித்த ஆவணம்

(B) The record of unpaid wage of laboures
தொழிலாளர்கள் தினக்கூலி ஊதியம் பட்டுவாடா செய்யப்படாதது குறித்த ஆவணம்

(C) The record of the cost of materials
மூலப்பொருட்கள் விலைகுறித்த ஆவணம்

(D) The record of advance payment and their recoveries
முன்பணம் வழங்கப்பட்டது பின்பு பிடித்தம் செய்வது குறித்த ஆவணம்